ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2316/63 - 2023 ජනවාරි මස 27 වැනි සිකුරාදා - 2023.01.27

2316/63 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/9/2019/S/521.
எனது இல.: 3/6/4/4.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணத்தின், குருநாகல் மாவட்டத்தில், பொல்கஹவெல பிரதேச செயலாளர் பிரிவில் இல. 903 பொதுஹர மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள காணி உத்தியோகத்தர் மூலம் அளந்து தயார் செய்யப்பட்ட மு. பி. கு. 2533 மற்றும் 2022.12.28 திகதி அடிப்படை வரைபின் கீழ்வரும் பெயர் மற்றும் அளவைக் கொண்ட காணித் துண்டு.

**01. துண்டு இலக்கம்: 1**

காணியின் பெயர்: கடேவத்த புலுகஹமுலவித்த அல்லது புலுகஹவலேவத்த; உரிமை கோருபவர்: வரையறுக்கப்பட்ட பல்நோக்கு சேவை கூட்டுறவு சங்கம்; விஸ்தீரணம்: 0.0164 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரிமை கோருகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 24 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு பொல்கஹவெல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2023 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டீ. அனோமா திசாநாயக்க,
பிரதேச செயலாளர்,
பொல்கஹவெல.

பிரதேச செயலகம்,
பொல்கஹவெல,
2023, சனவரி 25.

EOG 01 - 0298